கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/ இரண்டாம் அரையாண்டுச் சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - II

2013/2014

~~2012/2013~~ (நவம்பர்/டிசெம்பர் 2016)

# TLS 3233 தமிழ் நாவலும் சிறுகதையும்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாக்களைத் தெரிவுசெய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (அ) தமிழில் நாவல் என்னும் இலக்கிய வடிவம் தோற்றம் பெற்ற சமூக, இலக்கியப் பின்னணியைத் தெளிவுபடுத்துக.. (10 புள்ளிகள்)

   (ஆ) தமிழின் ஆரம்பகால நாவல்களின் பண்புகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (15 புள்ளிகள்)

2. 1940கள் தொடக்கம் 1980கள் வரையான காலப்பகுதியில் தமிழ் நாவல் வளர்ச்சியில் காணப்படும் முக்கியமான போக்குகள் யாவை? விளக்குக. (25 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பெழுதுக.
   (அ) காவியமும் நாவலும்
   (ஆ) பிரதாப முதலியார் சரித்திரம்
   (இ) ராஜம் கிருஷ்ணனின் நாவல்கள்
   (ஈ) தலித்திய நாவல்கள் (12 ½ x 2 புள்ளிகள்)

## பகுதி II

4. (அ) சிறுகதைக்கும் நாவலுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினைச் சுருக்கமாகத் தருக. (10 புள்ளிகள்)

   (ஆ) ஆரம்பகாலத் தமிழ்ச் சிறுகதைகளின் உருவ, உள்ளடக்கப் பண்புகள் மற்றும் அவற்றை நிர்ணயித்த காரணிகள் குறித்துச் சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

5. தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குப் புதுமைப்பித்தன் அல்லது கு.ப.ராஜகோபாலன் ஆகிய இருவரில் எவரேனும் ஒருவர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து விளக்குக. (25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பெழுதுக.

   (அ) அம்பையின் சிறுகதைகள்.

   (ஆ) ஜெயகாந்தனின் சிறுகதைகள்

   (ஈ) தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மணிக்கொடி காலகட்டத்தின் முக்கியத்துவம்

   (உ) விடுதலைக்குப் பிற்பட்ட தமிழ்ச் சிறுகதையின் முக்கிய பண்புகள்

(12 ½ x 2 புள்ளிகள்)